# மன்/ஆண்டாங்குளம் றோ.க.த.க.ம.வி
## முதலாம் தவணைப் பரீட்சை ~ 2020

## கணிதம்

சுட்டெண் : ................................... தரம் : 09 நேரம் - 02 மணித்தியாலம்

**பகுதி - I**

01. $\frac{2}{3} + \frac{1}{5}$ சுருக்குக.

02. காரணிகளைக் காண்க. $x^2 - 49$


03. $1kg$ சீனியின் விலை ரூ 110 எனின் $400g$ சீனியின் விலை யாது?

04. $500kg$ இன் $\frac{3}{4}$ எவ்வளவு?

05. 19, 15, 11, 7, ……….. என்ற தொடரின் பொது உறுப்பு யாது?

06. தீர்க்க. $3x = 12$

07. $AB, CD$ என்பன நேர்கோடு எனின் $a$ இன் பெறுமானத்தை காண்க.




08. 39 ஐ துவித எண்ணாகத் தருக.

09. ரூ 2000 விலை குறிக்கப்பட்ட பொருள் ஒன்றிற்கு 8% கழிவு வழங்கப்படுகின்றது. எனின் பொருள் விற்ற விலை யாது?

10. $a = -\frac{1}{2}$ , $b = \frac{1}{2}$ எனின் $7b - 4a$ இன் பெறுமானம் காண்க.


kalvi.lk

11. $(x+3)(x-2) = x^2 \ldots\ldots\ldots - 6$ ஆகும். எனின் இடைவெளியில் வரவேண்டிய உறுப்பைக் காண்க.


12. $1011_{\text{இரண்டு}}$ என்பதை பத்தை அடியாகக் கொண்ட எண்ணாகத் தருக.

13. $4108m^3$ என்பதை $l$ ல் தருக?


14. காரணிப்படுத்துக. $a^2 - 5a + 4a - 20$

15. 


தரப்பட்ட உருவில் $x$ இன் பெறுமானம் காண்க.


16. 


உருவில் தரப்பட்டுள்ள பாத்திரத்தில் உள்ள நீரின் கனவளவைக் காண்க.

17. 


AB=CD எனில்
AC=BD எனக்காட்டுக.

18. விளையாட்டு கடிகாரம் ஒன்று 8% கழிவு வழங்கப்பட்டு ரூ 736 இற்கு விற்கப்படுகிறது. எனின் பொருளின் குறித்த விலை யாது?

19. 


உருவில் தரப்பட்ட தரவுகளிற்கமைய $x$ இன் பெறுமானம் காண்க.

20. அடைப்பு நீக்கி சுருக்குக. $3x\,(x-2) \;+\; 2\,(x^2 - 3x)$

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01)** $40, 36, 32, 28, \ldots\ldots$ என்ற எண்கோலத்தின்

i. பொது வித்தியாசம் யாது?

ii. பொது உறுப்பு யாது?

iii. 12ம் உறுப்பைக் காண்க.

iv. (n+1)ம் உறுப்பு 4(10-n) எனக் காட்டுக.

v. (- 36) எத்தனையாம் உறுப்பு ஆகும்?

---

**02)**

**a)** i. 71 ஐ துவித எண்ணாகத் தருக.

ii. $1001011_{\text{இரண்டு}}$ என்ற எண்ணை தசம எண்களாகத் தருக.

iii. சுருக்குக.

அ. $110111_{\text{இரண்டு}} + 1001_{\text{இரண்டு}}$ = ________

ஆ. $110101_{\text{இரண்டு}} - 1010_{\text{இரண்டு}}$ = ________

**b) காரணிப்படுத்துக.**

அ. $4x^2 - 12$

ஆ. $x^2 + 7x - 44$

---

**03)** வர்த்தகர் ஒருவர் ரூ10000 பெறுமதியான பொருள் ஒன்றை 10% இலாபம் கிடைக்கக் கூடியதாக அதன் விற்பனை விலையை குறிக்கின்றார்.

**i.** பொருளின் குறித்த விலை யாது?

**ii.** அவர் விற்பனையின் போது 8% கழிவு கொடுக்கின்றார். எனின் பொருளின் விற்பனை விலை யாது?

**iii.** வர்த்தகருக்கு கிடைக்கும் இலாபம் மற்றும் இலாப சதவீதம் என்பவற்றை காண்க?


**b. i.** சுருக்குக $\left(\frac{3}{5} - \frac{1}{2}\right)$ இன் $3\frac{1}{3}$

**ii.** நீர்த்தாங்கியொன்றில் $\frac{4}{5}$ பங்கிற்கு நீர் இருக்கிறது. இதிலிருந்து $\frac{4}{15}$ பங்கு நீர் பாவனைக்கு எடுத்தபின் $1600\, l$ நீர் எஞ்சியிருந்தது. எனின் தாங்கியின் கொள்வனவு யாது?

---


**04)** **a.** உருவில் தரப்பட்ட தரவுகளைக் கொண்டு தரப்பட்ட அட்டவணையை பூர்த்தி செய்க.

| கோணங்கள் | சமனான கோணங்களும் அதற்கான காரணங்களும் |
|---|---|
| $k$ | |
| $l$ | |
| $n$ | |
| $m$ | |





**b.** தரப்பட்ட உருக்களில் தெரியாத கோணங்களின் பெறுமானத்தைக் காண்க.

i.





ii.




kalvi.lk

**c.**




உருவின் தரவுகளைக் கொண்டு கீழேயுள்ள வினாக்களிற்கு விடை தருக.

1. $2x + 2y$ = .......................... (.............)
   $\therefore x + Y$ = .......................... (.............)
2. $X + y + z =$ .......................... (.............)
   $\therefore z =$ .................


---

**05)**

a. தொகுதி A இல் தரப்பட்ட கனவளவிற்கு சமனான கனவளவை தொகுதி B இல் இருந்து தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| $2.5\ m^3$ | $25\ ml$ |
| $4000\ cm^3$ | $3\ l$ |
| $1500\ cm^3$ | $25\ l$ |
| $25\ cm^3$ | $2500\ l$ |
| $25000\ cm^3$ | $4\ l$ |
| $3000\ cm^3$ | $1.5\ l$ |

b. ஒரு வீட்டின் நீர் தொட்டியொன்றில் நீளம், அகலம், உயரம் முறையே $2m$, $1.5m$, $3m$ ஆகும். அத் தொட்டியில் $2m$ உயரத்திற்கு நீர் உள்ளது.




1. தொட்டியில் கனவளவு யாது?
2. தொட்டியில் உள்ள நீரின் கனவளவு யாது?
3. குறித்த நபர் ஒருவர் நாளொன்றிற்கு பயன்படுத்த $150l$ நீர் தேவைப்படுகிறது. எனின் நால்வர் குடியிருக்கும் ஒரு வீட்டிற்கு தொட்டியில் உள்ள நீர் எத்தனை நாட்களிற்கு போதுமானது எனக் காண்க.

kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page